

# அடிப்படை வணிக கணக்குகள் பற்றி அறிதல்

**Importance of Basic Accounting in Business**



கட்டுரையாளர்

K. T. **ராஜன்,** சேர்மன் EPC, மதுரை

**ஒரு தொழில் முனைவோருக்கு வியாபாரம் திறம்பட நடத்துவதற்கு அடிப்படை கணக்கு முறைகள் அவசியம் தெரிந்து இருக்க வேண்டும்.**

அடிப்படை கணக்கு என்பது தொழிலுக்கு முதலீடு எங்கு இருந்து பெறுவது, அதை எப்படி திறம்பட பயன்படுத்தி வெற்றி கொள்வது என்று தெரிந்து வைத்து கொள்ள வேண்டும். இதில் பல புதிய தொழில் முனைவோர்கள் அடிப்படை கணக்கு ஞானம் இல்லாத காரணத்தால் தொழிலை சமாளிக்க முடியாமல் தடுமாறுகிறார்கள். உடலுக்கு எப்படி இரத்த ஓட்டம் அவசியமோ, அதே போல தொழிலுக்கு பண வரவு செலவு கணக்கு மிகவும் முக்கியமானது.

இன்று அநேக மாணவர்கள் பள்ளியில் படித்து முடித்த பிறகு இன்னும் மிக எளிய வணிகக் கணக்கில் கூட பிரச்னையுள்ளவர்களாக இருப்பதை காண முடிகிறது. அதற்கு அறிவியல் சார்ந்த பிரிவில் படிக்கும் பதினொன்றாவது மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களின் பள்ளி பாட புத்தகத்தில் வணிகம் பற்றிய அடிப்படை பாடங்கள் இல்லாதது தான். பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அடிப்படை வணிகக் கணக்கை

பாடமாக கொண்டு வந்தால் கல்வி திறன் மேம்படுவதோடு அவர்களின் தொழில் சார்ந்த திறனும் உயரும்.

நிர்வாகக் கணக்கின் பிரதான குறிக்கோள், நிறுவனம் முடிவெடுக்கும் (Management Decision) நோக்கங்களுக்கான சரியான வழிமுறைகளுடன், நிறுவனத்தின் எதிர்கால நிதி பரிவர்த்தனைகளுக்கான திட்டங்களை நிர்வகிப்பது, வரவு செலவுகளை கண்காணிப்பது மற்றும் பணியாளர்களின் வேலைகளை திறம்பட நடத்துவதிலும் இருக்கிறது.

ஒரு நிறுவனத்தில் அடிப்படை கணக்குகளை கீழ் கொடுக்கப்பட்ட திட்டப்படி அவசியம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

- Capital மூலதனம்
- Equity Capital - பங்கு மூலதனம்
- Debt Capital கடன் மூலதனம்
- Assets சொத்து
- Fixed Asset அசையா சொத்து
- Current Asset நடப்பு சொத்து
- Working Capital – நடைமுறை மூலதனம்
- Sundry Creditor - கடன் கொடுத்தவர் (Suppliers of Goods / Raw Materials/Services)
- Sundry Debtor கடன் வாங்கியவர் (Buyers of Goods / Services)
- Trial Balance – ஐந்தொகை
- Profit & Loss Statement லாப - நஷ்ட கணக்கு
- Balance Sheet - இருப்பு நிலை கணக்கு
- Cash Flow பணப் புழக்கம்

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்துமே ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இதை கண்டிப்பாக புதிய வியாபாரம் தொடங்கும் ஒவ்வொரு ஸ்டார்ட்அப் நிறுவனர்கள் தெரிந்து செயல்பட வேண்டும்.

ஒரு வியாபாரத்தின் சரியான வளர்ச்சிக்கு அடிப்படை கணக்குகளை பற்றி தெரிந்திருப்பது அந்த நிறுவனத்தின் மேலாண்மைக்கு மிகவும் முக்கியம். காலப்போக்கில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை விளக்கவும், நிறுவனத்தின் முதலீட்டாளர்களுக்கு அல்லது கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு பொறுப்புணர்வுடன் கடன் மற்றும் வட்டியை சரியான நேரத்தில் செலுத்தும் மனப்பான்மை வேண்டும். மேலும் முறையான அடிப்படை கணக்குகளை கையாள்வது மற்றும் முறையாக நிதியை சேமிப்பது மூலம் நிறுவனத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் உறுதுணையாக இருக்கிறது.

சரியான ஆட்களை வேலைக்கு தேர்வு செய்து பணிக்கு அமர்த்துவது பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)